# பாரதியாரின் பாஞ்சாலி சபதம் குறித்து இங்கு பாரதியாரின் பாஞ்சாலி சபதம்

## கொடுக்கப்பட்டுள்ளன.



Contents


1. இப்பகுதி என்ன சொல்கிறது?
2. இதைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?
3. முன்னுரை
4. பாஞ்சாலி சபதம்
5. ஆசிரியர் - பாரதியார்
6. நூலின் அமைப்பு
7. கதைச்சுருக்கம்
    i. பொறாமை
    ii. சகுனியின் சூழ்ச்சி
    iii. சூதாட்டமும் இழப்பும்
    iv. பாஞ்சாலியின் சபதம்
8. சகுனி
9. பாஞ்சாலி
10. வீமன்
11. விதுரன்
12. காப்பியச் சிறப்பு
13. அஸ்தினாபுரத்தின் பெருமைகள்
14. தொகுப்புரை
15. கேள்வி பதில்கள்


## இப்பகுதி என்ன சொல்கிறது?

- மன்னர்களைப் பற்றியும், மதங்களைப் பற்றியும் கவிதைகள் புனைந்த காலம் மாறி, மக்களை மையமாக வைத்துத் தனது பாட்டுத்திறத்தால் நானிலத்து மக்கள் மேனிலையடையப் பாடிய பாரதியைப் பற்றிச் சொல்கிறது.
- இந்திய இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தில் கதையின் திருப்புமுனையானதும் பாரதப் போரின் தொடக்கமானதுமான 'பாஞ்சாலி சபதத்தை' இந்தப் பாடம் குறிப்பிடுகிறது. பாஞ்சாலி சபதத்தின் மூலம் நாட்டு விடுதலையைப் பற்றி எடுத்துரைக்கிறது.
- யாவரும் அறிந்த கதையைக் கொண்டு, யாவரும் அறிந்து கொள்ள வேண்டிய உள்ளுறைப் பொருளாகப் பாரத தேவியைப் பாஞ்சாலியாக வைத்துப் படைத்துள்ளதைக் குறிப்பிடுகிறது.
- உரிமைகளை இழந்து அடிமைப்பட்ட, தோற்கக்கூடாத தாய் மண்ணைத் தோற்றுநிற்கும் இந்தியர்க்கும், இந்தியாவிற்கும் பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் - வெள்ளையர்க்குக் கௌரவர்களையும் குறியீடாக்கி உணர்த்துவதை எடுத்துரைக்கிறது.

## இதைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இதைப் படித்து, இதில் வரும் பாடல்களின் கருத்துகளை ஆழ்ந்து சிந்திப்பீர்களானால், பின்வரும் சமூக மாற்றங்களையும் சீர்திருத்த எண்ணங்களையும் பெறலாம்.

• இந்தப் பழைய கதை தமிழ் மக்களுக்குப் புதிய வாழ்வினைத் தருமா? என்பதை விளக்கலாம்.

• விடுதலை வேட்கை, சமநிலைச் சமுதாயத்தைப் படைத்தல் போன்ற உணர்வுகளை எடுத்துரைக்கலாம்.

• நாட்டு விடுதலையின் மூலம் பெண் விடுதலையை உணர்த்தலாம்.

• பழங்காலக் கவிதையைக் கொண்டு சமகாலக் கண்ணோட்டத்தில் காவியத்தை அமைத்திருப்பதால் 'பாஞ்சாலி'யின் மூலம் முற்போக்குக் கருத்துகளை எடுத்துச் சொல்ல முடியும்.

• பண்டிதத் தமிழ்நடையிலிருந்து விடுபட்டு, எளிய நடையில், எளிய பதங்கள் கொண்டு மக்கள் விரும்பும் வகையில் மெட்டு அமைத்துப் பாடல்களை உருவாக்கியுள்ள விதத்தினை அறியலாம்.

• 'பாஞ்சாலி சபதம்' - வடமொழி வியாச பாரதம், வில்லிபாரதம் ஆகியவற்றின் தன்மைகளிலிருந்து மாறுபட்டுத் தமிழ்ச்சூழலுக்கு ஏற்பப் படைக்கப்பட்டிருத்தலை அறியலாம்.

• பெண்ணுரிமையைப் பெண் வாயாலேயே கேட்க வைத்திருப்பதை உணரலாம்.

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இந்தியக் கவிஞர்களில் ஒருவரான சுப்பிரமணிய பாரதியாரால் எழுதப்பட்ட காப்பியம் பாஞ்சாலி சபதம். மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிந்துள்ள இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தில் உள்ள நிகழ்ச்சி ஒன்றினைக் காப்பியத்தின் மையப் பொருளாகப் பாரதியார் தெரிவு செய்து படைத்துள்ளார். பாரதியாருக்கு முன்னரே கம்பரும், (இரணியன் கதை) வில்லிபுத்தூராழ்வாரும் (நளாயினி கதை) இதுபோன்ற ஒரு கிளைக்கதையைத் தமிழாக்கியுள்ளனர். ஆனால், இவ்விருவருமே சமகாலக் கண்ணோட்டத்துடன் அணுகவில்லை என்றே குறிப்பிடலாம். பாரதியார் அந்தப் பழைய நிகழ்வினை, சமகால உணர்வின் அடிப்படையிலேயே படைத்திருக்கிறார்.

பாண்டவர்களின் பெருமையைக் கண்டு பொறாமை கொண்டான் துரியோதனன். தனக்குச் சேரவேண்டிய புகழ் தருமனுக்குச் செல்வதை நினைத்துக் கோபம் கொண்டான். பாஞ்சாலி, பலர் கூடியிருக்கும் அவையில் துரியோதனனைப் பார்த்துச் சிரித்ததும் கேலிசெய்ததும் மீண்டும் துரியோதனனைக் கோபமூட்டியது. தன் மாமன் சகுனியின் மூலமாகப் பாண்டவர்களை வஞ்சனையாகச் சூதாட்டத்தில் ஈடுபடுத்தி, நாட்டையும் பொருளையும் அபகரித்து, காட்டுக்கு அனுப்பி வாழுமாறு செய்து விடுகிறான் துரியோதனன். இந்நிலையில் பணயப் பொருளாகத் தன்னை வைத்து விளையாடிய பாண்டவர்களைப் பார்த்து எதிர்ப்புக் குரல் கொடுக்கிறாள் பாஞ்சாலி. அடிமையாக்கப் பட்ட பாஞ்சாலியைத் துகிலுரிதலிலும் கண்டனக் குரல் ஒலிக்கிறது. பின்னர் வீமன், அர்ச்சுனன், பாஞ்சாலி ஆகியோரின் சபதங்கள் பற்றி இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றது.

## பாஞ்சாலி சபதம்

தமிழனுக்கு நாட்டுப்பற்று ஊட்ட வேண்டிய தேவையை அடிப்படையாக்கியும், 'பெண்ணடிமை தீர்ந்தாலே நாடு விடுதலை அடையும்' எனும் கருத்தினை வலியுறுத்தவுமே பாரதி பாஞ்சாலி சபதத்தை உருவாக்கியுள்ளார். பல நாட்டு அரசர்கள் அமர்ந்திருக்கும் அவையில் ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டி, 'இன்னது செய்யாமல், 'இன்னது நடக்காமல்' அவிழ்க்கப்பட்ட என் கூந்தலை முடிக்க மாட்டேன் என்ற சபதம் செய்கிறாள். இக்காப்பியத்தில் வீமன், அருச்சுனன் ஆகியோரின் சபதம் இடம் பெற்றிருந்தும் அதனை விடுத்து, வீழ்ந்து கிடக்கும் பெண் சமூகத்திலிருந்து சபதம் மேற்கொள்ளும் ஒரு குரலாகப் பாஞ்சாலியின் சபதத்தை அமைத்திருப்பது மிகவும் சிறப்பானதாகிறது.

பாரதப் போரின் முக்கியப் பாத்திரப் படைப்புகளான துரியோதனன், துச்சாதனன் ஆகிய இருவரின் உயிரிழப்பே பாஞ்சாலி சபதத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு பெண் மூலமாக அதனைச் சாதித்துக் காட்டுகிற புதுமரபினைக் கையாண்டுள்ளார் பாரதியார். மண்ணாசையை அடிப்படையாகக் கொண்டு கதை பின்னப் பட்டிருந்தாலும், பாஞ்சாலி துகிலுரியப்படும் காட்சியைப் பாரதியார் தேசியத்தின் கோபமாகக் காட்டிப் 'பாஞ்சாலி சபதம்' எனப் பெயர் வைத்துள்ளார்.

## ஆசிரியர் - பாரதியார்

அடிமைத் தளையில் சிக்கிக் கிடந்த தமிழ்ச் சமூகத்தைத் தமது பாட்டுத் திறத்தால் எழுச்சி பெறச் செய்தவர் பாரதியார். 11.12.1882 இல் எட்டயபுரத்தில் சின்னச்சாமி அய்யருக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர். பெற்றோர் இட்ட பெயர் சுப்பையா என்பது. தம் பதினோராம் வயதிலேயே கவிதை எழுதும் ஆற்றல் பெற்றவர். எட்டயபுர சமஸ்தானப் புலவர்களால் 'பாரதி' என்ற புகழைப் பெற்றவர். 1903 ஆம் ஆண்டு தொடங்கி 1914 ஆம் ஆண்டு வரை கவிதைகளை எழுதிக் குவித்தவர். இந்திய நாட்டு விடுதலைக்காகவே எழுதியதால் தேசியக்கவியாகத் திகழ்ந்தார். 1920 இல் சென்னையில் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியர் பணியில் சேர்ந்து, திருவல்லிக்கேணி பகுதியில் வாழ்ந்து வரும் போது, கோயில் யானை தாக்கியதால் நோய்வாய்ப்பட்டு 1921 செப்டம்பர் 11 இல் இறந்தார். இவ்வாறு திருவல்லிக்கேணி யானையால் மென்று தின்னப்பட்ட தமிழ்க் கரும்பான பாரதியைப் பற்றியும் அவரது படைப்புகளைப் பற்றியும் ஏராளமான ஆய்வு நூல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவ்வகையில் பாரதியும் பாரதியின் எழுத்துகளும் காலத்தால் அழியாப் புகழ்பெற்ற தன்மை வாய்ந்தன என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

## நூலின் அமைப்பு

'பாஞ்சாலி சபதம்' இரண்டு பாகங்களையும் ஐந்து சருக்கங்களையும் கொண்டது. முதற்பாகம் - அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம் என இரண்டு சருக்கங்களைக் கொண்டது. இரண்டாம் பாகம் - அடிமைச் சருக்கம், துகில் உரியல் சருக்கம், சபதச் சருக்கம் என மூன்று சருக்கங்களைக் கொண்டது. ஒவ்வொரு பாகமும் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. பராசக்தி, வாணி ஆகிய தெய்வங்களைப் பற்றிய கவிதைகள் அவை. பாண்டவர்களின் பெருமையைக் கண்டு பொறாமை கொண்ட துரியோதனன், பாண்டவர்களை அழிக்கச் சகுனியின் சூழ்ச்சியுடன் திருதராட்டிரன் இசைவுடன் விதுரனை அனுப்பிப் பாண்டவர்களைச் சூதுக்கு அழைக்கின்றான். சூதாட்டச் சருக்கத்தில், சகுனியின் சூழ்ச்சி, சூதுத்திறமை, தருமன் நாட்டை இழந்து விடுவது பற்றிக் குறிப்பிடப்படுகிறது. அடிமைச் சருக்கத்தில், சூதாட்டத்தின் மதிமயக்கத்தில் தன்னை இழந்த தருமன், தன் தம்பியர் நால்வரையும் இழக்கும் நிலை சித்தரிக்கப்படுகிறது.

துகிலுரிதல் சருக்கத்தில் தருமனிடத்தில் எதுவும் இல்லாத நிலையில் திரௌபதியைப் பகடைப் பொருளாக வைத்து இழக்கிறான். திரௌபதியை அடிமைப்பட்டவளாகக் கருதி, துரியோதனன் துச்சாதனனை அழைத்துத் திரௌபதியைச் சபையில் துகிலுரியுமாறு கட்டளையிடுவது காட்டப்படுகிறது. சபதச் சருக்கத்தில் திரௌபதி துகிலுரியப்படலும், கண்ணன் அவளைக் காத்தலும், பீமன், அர்ச்சுனன், திரௌபதி ஆகியோர் சபதம் மேற்கொள்ளுதலும் காட்டப்படுகின்றது. இவ்வாறு பாரதியார் கதையமைப்பினை வைத்து முடித்துள்ளார்.

## கதைச்சுருக்கம்

பாரதி, பிரமனையும் வாணியையும் வணங்கிய பின்பு, அஸ்தினாபுரத்தின் பெருமைகளைக் குறிப்பிடுவதோடு கதை தொடங்குகிறது.

### பொறாமை

பாண்டவர்களின் புகழையும் செல்வப் பெருக்கையும் கண்டு பொறாமைப் பட்ட துரியோதனன், சகுனியின் துணைகொண்டு பாண்டவர்களை அழிக்க நினைக்கிறான். துரியோதனன் தந்தை திருதராட்டிரன் இதற்கு முதலில் இணங்கவில்லையாயினும், பாண்டவர்களைச் சூதுக்கு அழைக்க இணங்குகின்றான். இதன்படி திருதராட்டிரன், பாண்டவர்களை அழைத்து வர விதுரனை அனுப்பப் பாண்டவர்கள் அஸ்தினாபுரிக்கு வருகின்றனர்.

### சகுனியின் சூழ்ச்சி

அஸ்தினாபுரியில் பாண்டவர்களைச் சகுனி சூதுக்கு அழைக்கிறான். முதலில் மறுத்த தருமன், சகுனியின் சூழ்ச்சியில் விழுகிறான். இது விதியின் செயல்' என்று நினைத்துச் சம்மதிக்கிறான். அனைத்துச் செல்வங்களையும் இழந்து விடுகின்றான்; பின்னர், சகுனி தருமனைப் பார்த்து நாடுகளை இழக்கவில்லை' - தருமா, நாட்டை வைத்து ஆடினால் இழந்த செல்வங்களைப் பெற்று விடலாம் என்கிறான். சபையில் இருந்த விதுரன் இதற்கு உடன்படாமல் ஆட்டத்தை நிறுத்தச் சொல்லித் திருதராட்டிரனை வேண்டுகிறான்.

### சூதாட்டமும் இழப்பும்

திருதராட்டிரனோ பதில் சொல்ல முடியாமல் வீற்றிருக்கிறான். துரியோதனன் பதில் பேசுகிறான். விதுரனைத் திட்டுகிறான்; பழிக்கிறான். இதனால் விதுரனும் வாய்மூடித் தலைகுனிந்து அமர்கிறான். தருமன் தன் நாட்டைப் பணயமாக வைத்து இழக்கிறான். மீண்டும் சகுனி, தருமனைப் பார்த்துத், தம்பியர் நால்வரையும் பணயமாக வைத்துச் சூதாடினால், இழந்த அனைத்தையும் பெற்றுவிடலாம் என்று சொல்ல, தருமன் அவ்வாறே தம்பியரைப் பணயப் பொருளாக்கி விளையாட அதுவும் தோல்வியையே தருகிறது தருமனுக்கு. அவன் தன்னையும் இழந்த பின்னர், பாஞ்சாலியையும் பணயமாக வைத்து இழந்து விடுகிறான். தனது ஆசையை நிறைவேற்றிய மாமன் சகுனியைக் கட்டிப் பிடித்து மகிழ்ச்சியால் துரியோதனன் கூத்தாடினான்.

### பாஞ்சாலியின் சபதம்

பாண்டவர்கள் கடுந்துயரத்தில் மூழ்கினர். இந்நிலையில் துரியோதனன் பாஞ்சாலியை மன்றத்துக்கு அழைத்துவரச் சொல்லித் தேர்ப்பாகனை அனுப்புகிறான். அவள் வர மறுக்கிறாள். பின்பு, துச்சாதனனை அனுப்பி இழுத்து வரும்படி சொன்னான் துரியோதனன். துச்சாதனன் சென்று பாஞ்சாலியை அழைத்தான். கடும் கோபத்துடன் பேசினாள். உடனே கூந்தலைப் பற்றி இழுத்து வந்தான். சபையில் நின்றிருந்த ஐவரையும் பார்த்துக் கடுமையாகப் பேசினாள் பாஞ்சாலி. அந்நேரத்தில், பாஞ்சாலியின் சேலையைப் பற்றி இழுக்குமாறு கர்ணன் துச்சாதனனுக்குச் சொல்ல, துச்சாதனன் பாஞ்சாலியின் ஆடையைக் களைந்தான்.

பாஞ்சாலி, கண்ணனிடம் வேண்ட, கண்ணனின் அருளால் பாஞ்சாலியின் துகில் வளர்ந்து கொண்டே போகத் துச்சாதனன் மயங்கிக் கீழே சாய்ந்தான். துரியோதனனும் தலை கவிழ்ந்தான். இதனையடுத்து, கடுங்கோபங்கொண்ட வீமன், துரியோதனனையும், துச்சாதனனையும் போர்க்களத்தில் கொல்வேன் என்று சபதம் செய்தான்.

வீமனைத் தொடர்ந்து, அருச்சுனனும், பாதகனான கர்ணனைப் போரில் வெல்வேன் என்று சபதம் மேற்கொண்டான். இறுதியில் பாஞ்சாலி, துச்சாதனனின் இரத்தத்தையும் துரியோதனனின் இரத்தத்தையும் கலந்து அவிழ்க்கப்பட்ட என் கூந்தலில்

எண்ணெயாகப் பூசி முடிப்பேன். அது நிகழாத வரைக்கும் என் கூந்தலை முடியேன் என்று சபதம் செய்தாள். இந்நேரத்தில் ஐம்பெரும் பூதங்கள், இப்புவி தருமனுக்கே எனச் சாட்சியளிக்கும்படி பேரொலி எழுந்தது. இவ்வாறு பாஞ்சாலி சபதத்தின் கதை முடிகிறது.

## சகுனி

பாஞ்சாலி சபதத்தில் மையப் பாத்திரமாகத் திகழ்பவன் சகுனி. கதையின் திருப்பு முனைக்கும் கதை நிகழ்ச்சிகளின் இயக்கத்திற்கும் முக்கியமாக இருப்பவன் சகுனி. தனது புத்தி கூர்மையால் சதி திட்டம் தீட்டுவதில் வல்லவனாகக் காணப்படுகிறான். குடும்பத்திலோ, நாட்டிலோ சதித்திட்டம் என்ற உடனே நம் கண்முன் வந்து நிற்பவன் சகுனி. அந்த அளவுக்கு தன் சதித் திட்டத்தால் பிரபலம் ஆனது சகுனி எனும் பாத்திரப்படைப்பு.

**சகுனியின் சதி**

பாண்டவர்களின் வளர்ச்சியினைப் பொறுக்கமாட்டாதவனான துரியோதனன், தன்னுடைய மாமன் சகுனியிடம் தன் மனக்கருத்தை வெளிப்படுத்துகிறான். சகுனியும் சந்தோஷமாகச் சதித்திட்டம் ஒன்றினைச் சொல்கிறான். புதிதாக ஒரு மண்டபம் கட்டி, அது தெய்வ நலன்கள் உடையதாக எடுத்துச் சொல்லி, அதனைப் பார்வையிடப் பாண்டவரை அழைத்து வரவேண்டும். அதன்பின்பு அவர்களைச் சூதாட்டத்தில் ஈடுபடும்படி அழைத்து ஒரு நாழிகையிலேயே அவர்களது செல்வத்தை வென்றிடுவோம் என்றான். மேலும் போரினால் பாண்டவரை வெல்லமுடியாது என்றும் சூதினால் தான் வெல்லமுடியும் என்று துரியோதனனுக்கு ஆலோசனை சொன்னான் சகுனி. இதனைக் கேட்ட துரியோதனன் மகிழ்ந்து சகுனியை வணங்கினான்.

தீய சக்தியின் திரண்ட உருவமாகச் சகுனி காணப்படுகிறான். தீயனவற்றையே தொழிலாகக் கொண்டு 'கூட இருந்தே குழிபறிப்பது போலக்', கௌரவர்களான துரியோதனனையும் துச்சாதனனையும் அழிக்கும் எண்ணங்கொண்டவனாகச் சகுனியின் சதித்திட்டம் அவனைக் காட்டுகிறது. இந்தத் தீய செயல்களால் தன்னையும் இழந்து விடுகிறான் என்பது கண்கூடாகக் காணமுடிகிறது.

**தருமனின் மனத்தை மாற்றியமை**

தன்னுடைய நாட்டினைப் பணயப் பொருளாக வைத்திழந்த தருமனைப் பார்த்துச் சகுனி, தருமனே! செல்வத்தையும் நாட்டையும் இழந்துவிட்டாய். இனி எப்படிப் பிழைப்பாய். உனது தம்பியர் நால்வரையும் பணயம் வைத்துச் சூதாடினால் இதுவரை இழந்ததை எல்லாம் மீட்டு விடலாம் என்றான். துரியோதனனும் அவ்வாறே சொன்னான். தம்பியர் முகத்தில் கவலை படரத் தொடங்கியது. வீமன் கடுங்கோபம் கொண்டான். தருமன், தம்பியரைப் பணயப்பொருளாக வைத்து விளையாடத் தொடங்கி முதலில் நகுலன், சகாதேவனை வைத்து இழக்கிறான். அடுத்த நிலையில் தருமன் மிகுந்த மனவேதனைப்படுகிறான். சூதாட்டத்தை இத்துடன் நிறுத்திவிடலாம் என நினைக்கிறான்.

அந்நேரத்தில் சகுனி, தருமனைப் பார்த்து, தருமனே! "நகுலனும் சகாதேவனும் வேறொரு தாய்க்குப் பிறந்தவர்கள். அதனால் அவர்களைச் சூதாடி இழந்துவிட்டாய். வீமனும் அருச்சுனனும் உன்னைப் போன்று குந்தியின் பிள்ளைகள் என்பதால் அவர்களைப் பணயப் பொருளாக வைக்கவில்லையா? என்று கேட்கிறான். அதனைக் கேட்ட தருமனுக்குக் கோபம் வந்தது. "சூதாட்டத்தில் தான் இழந்துள்ளோம்; ஒற்றுமையை நாங்கள் இழந்துவிட வில்லை" என்று சொல்லி இருவரையும் பணயப் பொருளாக வைத்து விளையாடச் சம்மதித்து இழக்கிறான்.

## பாஞ்சாலி

பாஞ்சால தேசத்தினர் பெற்ற தவப்பயன் தான் பாஞ்சாலி. பஞ்சபாண்டவரின் உயிர் போன்றவள்; அருள் தன்மையுடன் ஒளிவீசுபவள்; ஓவியம் போன்றவள்: பூமியில் உலவும் செல்வமகள்; எங்கும் தேடிக் கிடைப்பதற்கரிய திரவியம் பாஞ்சாலி.

படிமிசை இசையுறவே - நடை
பயின்றிடும் தெய்வீக மலர்க்கொடியைக்
கடிகமழ் மின்னுருவை - ஒரு
கழனியக் கனவினைக் காதலினை
வடிவுறு பேரழகை- இன்ப
வளத்தினைச் சூதினிற் பணயம் என்றே

(கமனியக் கனவு = ஆகாயக் கனவு)

என வரும் பாடலில் பாரதி குறிப்பிடுகிறார். காப்பியத்தின் தலைமை மாந்தர் பாஞ்சாலியே. அடிமைத் தளையைத் தகர்க்க எழும் பாரதச் சக்தியாகப் பாரதியால் படைக்கப்பட்டவள் பாஞ்சாலி.

**பணயப் பொருள்**

சகுனியின் சதியால் பணயப் பொருளாக வைக்கப்பட்டவள் பாஞ்சாலி. பாஞ்சாலியைப் பணயமாக வைத்து விளையாடிய செயலைப் பாரதி, நல்யாகத்தில் படைக்கப்படுகின்ற வேள்விப் பொருளை, எச்சில் தேடியலையும் நாய்க்குமுன் அது மென்றிட வைப்பதைப் போன்று உள்ளது என்றும், நல்ல உயரமுள்ள, அகலமுள்ள பொன் மாளிகையைக் கட்டி, அதில் பேயினைத் தேடிக் கண்டுபிடித்துக் குடியமர்த்துவது போல உள்ளது என்றும் கூறுகிறார்.

செருப்புக்குத் தோல் வேண்டியே - இங்குக்
கொல்வரோ செல்வக் குழந்தையினை
விருப்புற்ற சூதினுக்கே - ஒத்தபந்தயம்
மெய்த்தவப் பாஞ்சாலியோ?

என, செருப்புச் செய்வதற்குத் தோல் தேவையென்பதால் அன்புமிக்க குழந்தையைக் கொல்வதற்குத் துணிவது போன்று உள்ளது என்கிறார் பாரதியார்.

**எதிர்ப்புக் குரல்**

விதியின் வலிமையால் தருமன், சகுனியுடன் சூதாடியதால் நாடிழந்து நல்ல பொருள் இழந்து, தம்பியரை இழந்து, இறுதியில் பாஞ்சாலியை இழந்து விடுகிறான். துரியோதனன் தன் தேர்ப்பாகனை அழைத்து, பாஞ்சாலியைச் சபைக்கு அழைத்து, வருமாறு சொன்னான். தேர்ப்பாகனும் சென்று பாஞ்சாலியைப் பணிந்து அழைத்தான். அப்போது பாஞ்சாலி சீறிப்பாய்ந்தாள்.

யார் சொன்ன வார்த்தையடா?
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா? யார் பணியால்
என்னை அழைக்கிறாய்?

என்று தேர்ப்பாகனைப் பார்த்துக் கேட்டாள் பாஞ்சாலி.

நான் துருபத மன்னனின் மகள். சூதில் தோற்றுப் போன பின்னர் என்னைத் தாரமாக்கிக் கொள்ளும் உரிமை அவர்க்கில்லை.

கௌரவர் வேந்தர் சபை தன்னில் - அறம்
கண்டவர் யாவரும் இல்லையா? மன்னர்
சௌரியம் வீழ்ந்திடும் முன்னரே - அங்கு
சாத்திரம் செத்துக் கிடக்குமோ?

எனச் சொல்லி, தேர்ப்பாகனை மீண்டும் திருப்பியனுப்புவதைக் காணலாம்.

பழம்பெரும் பாரதக் கதையில் பாஞ்சாலி எதிர்த்துப் பேசுபவளாகக் காணப்படவில்லை. ஆனால் பாரதியார், பாஞ்சாலியைக் கணவன்மார்களையும், கௌரவர்களையும் எதிர்த்துப் பேசுபவளாகப் படைத்துப் பெண்ணுரிமையை நிலைநாட்ட விரும்புகிறார்.

**கண்ணனை வேண்டுதல்**

அடிமையாக்கப்பட்ட பாஞ்சாலியைத் துச்சாதனன் பலர் இருக்கும் அவையில் இழுத்துவந்து ஆடையைக் களைய முற்படுகிறான். அந்நேரத்தில், அனைவராலும் கைவிடப்பட்ட, காப்பாற்றப்படாத சூழ்நிலையில் பாஞ்சாலி கண்ணனை இறைஞ்சி வேண்டுகிறாள்.

முதலையின் வாயில் அகப்பட்ட யானையின் கூக்குரலைக் கேட்டு அருள் புரிந்தவனே! சக்கரம் ஏந்தி நிற்பவனே! சாரங்கம் என்ற வில்லைக் கையில் ஏந்தி நின்று போரிடுபவனே! நீ அனைத்துத் துக்கங்களையும் அழித்திடுவாய். தொண்டர்களின் கண்ணீரைத் துடைத்திடுவாய்! வானத்துள் வானாக இருப்பவனே! தீயிலும் மண்ணிலும் காற்றிலும் எல்லாவற்றிலும் நிறைந்து இருப்பவனே! அறிவுக்கும் எட்டாத பொருளே! எந்தன் சொல்லினைக் கேட்டு எனக்கு அருள் புரிவாய், இரணியன் உடல் பிளந்த கண்ணனே! உன்னடி தொழுது நான் அடைக்கலம் புகுந்தேன்! எனப் புலம்புகிறாள்.

வாக்கின் தலைவனை (பிரமனை) ஆட்கொண்ட வலிமை உடையவனே! எந்தையே! அருட்கடலே! இங்கு நூறு பேரான கௌரவர்களின் கொடுமையினின்று என்னை மீட்பாயாக! வையகம் காப்பவனே! மணிவண்ணனே! என் மனச்சுடரே! நின் தாமரை மலர்களைச் சரண் புகுகின்றேன் என வேண்டினாள் பாஞ்சாலி, கண்ணன் அருள் புரிந்தான்.

அந்நேரத்தில் துச்சாதனன், பாஞ்சாலியின் துகிலை உரிய உரிய அவளுக்குத் துகில் மலைபோலக் குவிந்து கொண்டே இருந்தது. அவனால் முடியாமல் மயங்கிக் கீழே விழுந்தான்.

**வீடுமனின் தேற்றல்**

'மன்னர் சபைதனில் என்னைப் பிடித்து இழுத்துப் பலபட இழிசொற்களால் பேசுகின்ற துரியோதனனை, நிறுத்தடா? என்று சொல்ல யாருமில்லையா?' எனக் கேட்ட பாஞ்சாலிக்கு, தகுதியால் உயர்ந்தவனான வீட்டுமன் எழுந்து, பாஞ்சாலியே! உன்னைத் தருமன் சூதாடித் தோற்றான்; நீயோ, வாதாடி அவன் செய்கை தவறு என்கிறாய். சூதிலே வல்ல சகுனி தன் திறத்தால் உன் மன்னனை வீழ்த்தி விட்டான்.

உன்னையும் பணயப் பொருளாக வைத்து இழந்தது தவறு என்று சொல்கிறாய். பண்டைய கால நெறிப்படி நீ சொல்வது சரி. அந்நாளில் ஆணும் பெண்ணும் சமமாக இருந்தனர். ஆனால் பிற்காலத்தில் அது மறைந்து போய்விட்டது. இப்போதுள்ள சாத்திரங்களின்படி ஆணும் பெண்ணும் சமமில்லை. இப்போது ஒருவன் தன் மனைவியை விற்கவும் தானமாகக் கொடுக்கவும் உரிமையுண்டு. இது முழுவதும் விலங்கு வாழ்க்கை. எனவே தருமன் உன்னை அடிமையாக்க உரிமை கொண்டவன். இங்கே நடக்கும் செய்திகளைக் கண்டால் கல்லும் நடுங்கும்; விலங்குகளும் கண்புதைக்கும். இங்கே நடைபெறும் செய்கைகள் அநீதியானவை.

சாத்திரத்தில் சொல்லிய நெறிகளையும் வழக்கத்தையும் நீ கேட்பதனால், அவை உன்சார்பாகக் கேட்க யாரும் இல்லை. நானும் தீய செயல்களைத் தடுக்கும் திறமில்லாதவனாகவே இருக்கிறேன் என்று சொல்லித் தலை கவிழ்ந்து அமர்ந்தான் வீடுமன்.

**பாஞ்சாலியின் சபதம்**

இறுதியில் பாஞ்சாலி சபதம் செய்தாள். ஆம் பராசக்தி மீது ஆணையிடுகின்றேன். பாவி துச்சாதனனை என் கணவன் வீமன் கொன்ற பின்னர் அவன் உடம்பிலிருந்து ஊறியெழும் ரத்தத்தையும் பாழ்பட்டுப் போன துரியோதனன் உடம்பு ரத்தத்தையும் கலந்து என் கூந்தலில் பூசுவேன்.

அதன் பின்னரே என் கூந்தலில் நறுநெய் பூசி என் கூந்தலை முடிப்பேன். அதுவரையில் என் கூந்தலை முடிக்கமாட்டேன் என்று பாஞ்சாலி சபதம் செய்தாள். இவ்வாறு இம்மூவரின் சபத உரைகளைக் கேட்டவுடன் தேவர்கள் 'ஓம்' என்று உரைத்தனர். ஐம்பெரும் பூதங்களும் இந்தப் புவி தருமனுக்கே எனச் சாட்சியுரைத்தன என்று சபத உரைகளை முடிக்கிறார் பாரதியார்.

## வீமன்

பாண்டவர் ஐவருள் இரண்டாமவன். தோள்வலி மிக்கவன். சிறு வயது முதலே துரியோதனனைத் தன் எதிரியாகக் கருதி வந்தவன். தருமன், பாஞ்சாலியைப் பணயம் வைத்ததும் முதலில் சினம் கொள்பவன் இவனே. அதேபோல் சபதம் மேற்கொள்பவனும் வீமனே.

**வீமனின் கோபம்**

பணயப் பொருளாகத் தன்னையும் தம்பியரையும் வைத்து இழந்தது குறித்து, வீமன் மிகவும் கவலையுற்றுத் தருமனைப் பார்த்துச் சுடுசொற்களை வீசினான்.

சூதர் மனைகளிலே - அண்ணே
தொண்டு மகளிருண்டு
சூதர் பணயம் என்றே - அங்கு ஓர்
தொண்டச்சி போவதில்லை
என முழங்குகிறான் வீமன்.
தவறு செய்துவிட்டாய் - அண்ணே
தருமம் கொன்றுவிட்டாய்

என்றும் குறிப்பிடுகின்றான். 'பாஞ்சாலியை நாம் வெறும் சோரத்தினால் (கள்ளத்தால்) அடையவில்லை. சூதாட்டத்தில் வெற்றி பெறவில்லை. வீரத்தினால் வென்றோம் என்று தருமனைப் பார்த்துக் கேட்கிறான் வீமன். நீங்கள் நாட்டையெல்லாம் சூதில் பணயமாக வைத்தீர்கள். நாங்கள் பொறுத்தோம்! எங்களைப் பணயப் பொருளாக வைத்தீர்! அடிமையாக்கினீர். அதையும் பொறுத்தோம். ஆனால்,

துருபதன் மகளை - திட்டத்
துய்மன் உடன் பிறப்பை
இருபகடை என்றாய் - ஐயோ
இவர்க்கு அடிமை என்றாய்

எனத் தருமனை நோக்கிக் கடும் சொற்களை வீசினான். மேலும், சகாதேவனைப் பார்த்து,

இது பொறுப்பதில்லை - தம்பி
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் அண்ணன்
கையை எரித்திடுவோம்

என்று தருமன் செயலை நினைத்துப் பொறுக்க முடியாதவனாக வீமன் சினந்து - இவ்வாறு பேசினான்.

**வீமனின் சபதம்**

நிலைகுலைந்து அழுது புரளும் பாஞ்சாலியைப் பார்த்துத் துஷ்டனான துச்சாதனன் தீய சொற்களைக் கூறிக்கொண்டே அவளது ஆடையைக் களைகிறான். கண்ணனது அருளால் மேகக் கூட்டம் போலத் துகில் பெருத்து வருவதைக் கண்ட துச்சாதனன் கீழே விழுந்தான். இந்நிலையில் வீமன் மிகவும் கோபங்கொண்டு சபதம் செய்கிறான்.

இங்குத் தேவர்கள் மீது ஆணை, பராசக்தி மீது ஆணை, பிரமதேவனின் மீது ஆணை, கண்ணன் மீது ஆணை என இறைப் பெருமக்கள் மீது ஆணையிட்டு, போர்க்களத்தில் துச்சாதனனையும், துரியோதனனையும் கொன்று அவர்களது இரத்தத்தைக் குடிப்பேன். இது உலகில் நடக்கும். அனைவரும் காண்பீராக! என்று சபதம் எடுத்தான்.

**வீமனின் கோபம் தணிதல்**

தருமன் மீது கடுங்கோபம் கொண்ட வீமனைப் பார்த்து அர்ச்சுனன் பேசுகிறான்.

வீமனே! என்ன வார்த்தை சொன்னாய்? யார் முன்னே இதைச் சொன்னாய்? சினம் பொருந்திய நீ உனது அறிவைப் புதைத்ததாலே மூன்று உலக நாயகனான தருமனைச் சினந்து இவ்வாறு பேசுகிறாய். கோபம் கொள்ளாதே.

தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம் இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுவுண்டு காண்டீபம் அதன்பேர்

என்று "தருமத்தின் வாழ்வைச் சூது விழுங்கும் ஆனால், தருமம் மறுபடியும் எப்படியாவது வெற்றி பெற்றே தீரும். இது இயற்கை உண்மை. அதுவரை நாம் பொறுமையாக இருப்பதே நல்லது. கோபம் வேண்டாம். யார் மேலும் குற்றமில்லை", என்று சொல்லி, வீமனின் கோபத்தைத் தணித்தான் அருச்சுனன்.

## விதுரன்

மன்னன் திருதராட்டினனுக்குத் தம்பியாக இருந்தாலும், அமைச்சர் பொறுப்பு ஏற்றவன். நீதிநெறி கற்றவன். நீதியை நிலை நாட்டுவதில் உறவு முறைகளைப் பார்க்காதவன். அதனாலேயே துரியோதனனால் வெறுக்கப்பட்டவன்.

**விதுரனின் அறிவுரை**

சூதாட்ட மன்றத்தில் தருமனிடம் உள்ள செல்வம் அனைத்தையும் சகுனி வென்று விடுகிறான். அதன்பிறகு நாட்டைப் பணயமாக வைத்து விளையாடலாம் எனச் சகுனி சொல்கிறான். இதனைக் கேட்ட விதுரன் அதிர்ச்சியடைந்து, 'இதனால் கௌரவர் குலம் அழியும்' என்று குறிப்பிட்டான். சூதாட்டம் இனித் தேவையில்லை, நிறுத்த வேண்டும் என்றான். தன்னுடைய அண்ணன் திருதராட்டிரனுக்கும் தெரிவித்தான். இதனைக் கேட்ட துரியோதனன், கண்களில் தீப்பொறி பறக்க மிகவும் கோபம் கொண்டு விதுரனைத் திட்டுகிறான். 'எங்களிடத்தில் உள்ள செல்வத்தை அனுபவித்துக் கொண்டு; பாண்டவருக்காகப் பரிந்து பேசுகிறாயே? உன்னைச் சபையில் வைத்ததே பெருங்குற்றம்' என்றான். அன்பில்லாத பெண்ணுக்கு எவ்வளவுதான் நன்மை செய்தாலும் வாய்ப்பு வரும் பொழுது கணவனை விட்டு அகன்று விடுவாள். அதுபோல நீ இருக்கிறாயே என்று துரியோதனன் பழித்தான்.

அதற்கு விதுரன், 'உன்னை நல்வழிப்படுத்த முயன்றேன். உன் அவையில் என்னைப் போன்றவர்கள் இருத்தல் கூடாது. குலம் கெட்ட நீசர்கள், மூடர்கள், பித்தர் போன்றோர் மட்டுமே இருத்தல் முடியும். உன் சாவைத் தடுத்திடவே உரைத்தேன். இனி எவ்விதப் பயனும் இல்லை' எனத் தன் தலைகவிழ்ந்தபடி இருந்தான்.

## காப்பியச் சிறப்பு

காப்பியங்களில் வருணனை ஓர் இன்றியமையாத கூறாகும். பாஞ்சாலி சபதத்திலும் வருணனை சிறந்த இடத்தைப் பெறுகிறது. அது காப்பியத்தின் சிறப்புக்குரிய ஒன்றாகவும் திகழ்கிறது.

**வருணனை**

இயல்பாகவே இயற்கையின் மீது காதல் கொண்ட கவிஞர், பாஞ்சாலி சபதத்திலும் இயற்கையின் வருணனையை அதிகமாகவே வழங்கியுள்ளார். பாண்டவர்கள் அஸ்தினாபுரத்திற்குப் போகும் வழியில் மாலை நேரத்து வருணனை அழகாகப் பேசப்பட்டுள்ளது. அந்த மாலை நேரத்தின் அழகினைப் பாஞ்சாலியிடம் அருச்சுனன் சொல்வது போல் அமைக்கப்பட்டுள்ளது.

'பார்சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில் எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடி இந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! - செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! - வெம்மை தோன்றாமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்! - பாரடி!
நீலப் பொய்கைகள்! -அட்டா, நீல
வன்ன மொன்றில் எத்தனை வகையடி!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை! - கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ் சிகரங்கள்! - காணடி, ஆங்கு
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்

இருட்கடல்! - ஆஹா! எங்குநோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!'

சூரியனைச் சூழ்ந்து நிற்கும் மேகங்கள் சிவப்பு நிறமானவையாக இருப்பதனால் அவை தீப்பட்டு எரிவன போல் தோன்றுகின்றன. நல்ல பொன்னைக் காய்ச்சி உருக்கி விட்டாற்போல், தங்கத்தீவுகள் போன்று மேகங்கள் உள்ளன என்று வருணித்துள்ளதைக் காணலாம். அதுபோலவே, நீலநிறமான பொய்கையில் மிதக்கும் தங்கத் தோணி போல, நீல நிறமான மேகத்திரளின் நடுவே தங்கமயமான சூரியன் மிதந்து கொண்டிருக்கிறது என்கிறார் கவிஞர்.

என்னைப் பாவப்படுத்துதல் தகுமோ? பெண்பாவம் பொல்லாதாதலால் உமக்கு இழிவு அன்றோ ? என்று அவையில் வீடுமனிடத்திலும் சாத்திரம் கற்றோர்களிடத்திலும் பாஞ்சாலி வேண்டுகோள் விடுக்கிறாள். அந்த வேண்டுகோளைப் பாரதி இவ்வாறு வருணிக்கிறார்:

அம்புபட்ட மான்போல் அழுது துடித்தாள்
வம்பு மலர்க் கூந்தல் மண்மேல் புரண்டுவிழத்
தேவி கரைந்திடும்

என அவலத்தோடு வருணிப்பதைக் காணலாம்.

## அஸ்தினாபுரத்தின் பெருமைகள்

துரியோதனனின் நகரமான அஸ்தினாபுரத்திற்கு நிகரான ஊர் எதுவுமில்லை. உயர்ந்த, நீளமான தெருக்களும், நகரைச் சுற்றி அகழியுமாகக் கொண்டு விளங்குகிறது. நகரத்தின் மதில்கள், மாளிகைகள் நட்சத்திர மண்டலத்தில்கூட இதுபோலக் காணமுடியாது என்று நகரின் பெருமைகள் பேசுகிறார் பாரதியார்.

ஆகாயத்தில் மிக உயரத்தில் நெருங்கி அசைந்து, சூரிய கிரணங்களையும் உள்ளே புகாதபடி மறைத்து விளங்குகின்ற வெண்மையான கொடிச்சீலைகள், வெண்ணிறமான ஆகாய கங்கையின் அசைகின்ற குளிர்ந்த அலைகளைப் போலத் தோற்றம் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றன. பசுமையான பாக்கு மரங்கள் நிறைந்த சோலை, இந்திரனுக்காகப் படைக்கப்பட்ட சுவர்ணமயமான சுவர்க்கலோகமோ? குபேரனது அளகாபுரியோ என்பது போல மாடமாளிகைகள் காணப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நெடுந்தேர்களும் யானைகளும், மற்ற சேனைகளும் வீதிகளில் ஒன்றோடொன்று எதிரெதிரில் நெருங்கியிருத்தலால், இடம்பற்றாமல் இருப்பதால் 'போங்கள், போங்கள்' என்று பிறரைப் பார்த்துச் சொல்லும் ஒலிகளே கேட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். எல்லா மலைகளிலும் எல்லாக் காடுகளிலும், கடல்களிலும் உண்டாகிற பொருள்கள் குவித்து வைத்திருக்கும் கடைவீதிகளை அஸ்தினாபுரத்தில் காணலாம். பல நடனப் பெண்களின் நடனம், தொழில் உணர்ந்த கலைஞர்களின் ஓவியங்கள் என அஸ்தினாபுரத்தின் பெருமைகள் பற்றிப் பாஞ்சாலி சபதம்' குறிப்பிடுகின்றது.

## தொகுப்புரை

பாண்டவர்கள் வாழ்க்கையை எந்த வழியாலும் கெடுத்திட எண்ணங் கொண்டவனாகத் துரியோதனன், சூதும் பொய்யும் உருவான சகுனி மூலம் பாண்டவர்களைச் சூதாட்டத்தில் ஈடுபடுத்தி, நாட்டையும் செல்வத்தையும் அபகரித்ததோடு மட்டுமல்லாமல், ஐவரையும் பாஞ்சாலியையும் பணயப் பொருளாக வைத்து அடிமைப்படுத்தினான்.

அடிமையாக்கப்பட்ட பாஞ்சாலியைச் சபைதனில் இழுத்துவரக் கட்டளையிடுகிறான். அப்படியே துச்சாதனன் அந்த இழிசெயலைச் செய்கிறான். அந்நேரத்தில் பாஞ்சாலி மிகவும் கோபங் கொண்டவளாகப் பேசுகிறாள். (இந்த இடத்தில் பெண்களின் உரிமையைப் பெண் மூலமாகவே கேட்க வைத்து ஆணினத்தின் அதிகாரத்தைக் கேள்வி கேட்பதாகப் பாரதி பாஞ்சாலி வழிநின்று பேசுகிறார்.) சாத்திரங்களில், இதிகாசங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கும் பெண்ணின் அவல நிலையைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

பாஞ்சாலியைத் துச்சாதனன் முடி பற்றித் தெருவில் இழுத்து வரும்போது, வீதிமருங்கிலும் நின்று வேடிக்கை பார்த்த மக்களை நொந்து 'வீரமிலா நாய்கள்' என்றும், அவர்கள் அழுது புலம்புகின்ற அந்தச் செயலை; அந்தப் பயனில்லாத புலம்பலைப் 'பெட்டைப்புலம்பல்' என்றும் சாடுகிறார் பாரதியார்.

சபைதனில் பெண்மையை மானபங்கம் செய்யும் போது, பெண்ணின் வாயால் பெண்ணரசினைப் பற்றிக் கேட்கிறார் பாரதியார்.

தன்னுடைய கணவன்மார்களைப் பார்த்து வேதனைப்பட்டு, 'என்னைப் பணயத்தில் வைத்து விளையாட உங்களுக்கு என்ன உரிமை' என்று கேட்க வைக்கிறார் கவிஞர்.

இறுதியாக, காவியத்தில் மானிட சமுதாயத்தில் நம்பிக்கை வைத்தது போதும் என்று நினைத்து இறைவனிடம் வேண்டுகிறாள். காப்பாற்றப்படுகிறாள்.

பின்னர், தன்னை அவமானப்படுத்தியவர்களைக் கொன்று அதன் மூலமாகவே அவலத்தினுக்கு விடிவுகண்டு, தன் கூந்தலை முடிப்பதாகச் சபதம் ஏற்க வைத்துக் கதையை முடித்துள்ளார் பாரதியார்.

பாரத நாட்டின் விடுதலையையும் பெண் விடுதலையையும் ஒன்றாக நினைத்துக் காப்பியத்தை நிறைவு செய்கிறார்.

## கேள்வி பதில்கள்

1. பாஞ்சாலி சபதம் - நூல் குறிப்பு எழுதுக.

விடை : இந்தியப் பகுதிகளில் நெடுங்காலமாக வழங்கி வந்த இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தில் உள்ள ஒரு நிகழ்ச்சியைக் காவியமாக எழுதினார் பாரதியார். 1912-இல் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த பொழுது எழுதினார். பலர் இருக்கும் சபையில் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் அவலத்தினைச் சித்தரித்துள்ளார். பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் வீமன், அருச்சுனன், பாஞ்சாலி ஆகிய மூவரும் சபதம் செய்கின்றனர்.

2. பாரதியார் - சிறுகுறிப்பு வரைக.

விடை : 11.12.1882 - இல் எட்டயபுரத்தில் சின்னச்சாமி அய்யருக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் சுப்பையா என்பது. தம் பதினோராம் வயதிலிருந்து கவிதைகள் படைக்க ஆரம்பித்தார். உறங்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தம் பாட்டுத் திறத்தால் தட்டி எழுப்பியவர். தேசிய எழுச்சி, சாதி ஒழிப்பு, பெண்ணடிமை எனப் பாரதியின் கவிதைகளும் பரந்துபட்டவை. 1921-இல் சென்னையில் காலமானார்.

3. பாஞ்சாலி சபதத்தின் காப்பிய அமைப்பினை எழுதுக.

விடை : பாரதியாரால் எழுதப்பட்ட பாஞ்சாலி சபதம் இரண்டு பாகங்களைக் கொண்டது.

முதற்பாகம் - அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம் என இரண்டு சருக்கங்களைக் கொண்டது.

இரண்டாம் பாகம் - அடிமைச் சருக்கம், துகில் உரியல் சருக்கம், சபதச் சருக்கம் என மூன்று சருக்கங்களைக் கொண்டது.

4. சகுனியின் சதி குறித்து எழுதுக.

விடை : தெய்வ மண்டப நலன்கள் உடையதாகச் சொல்லும்படி ஒரு மண்டபத்தைக் கட்டி, அதனைப் பார்வையிடப் பாண்டவர்களை அழைத்து வரவேண்டும். அதன்பிறகு சூதாட்டத்தில் அவர்களை ஈடுபடுத்தி, அவர்களிடமுள்ள நாட்டையும் செல்வத்தையும் பெற்று விடலாம் என்று சதி செய்தான் சகுனி.

5. தருமனின் மனத்தைச் சகுனி எவ்வாறு மாற்றினான்?

விடை : நாட்டையும் தன்னையும் தம்பியரையும் பணயப் பொருளாக வைத்து இழந்த தருமன் மிகவும் வேதனையோடு, சூதாட்டத்தை நிறுத்திவிட நினைத்தான். அப்படிச் சொல்ல நினைத்த தருமனை நோக்கிச் சகுனி, தருமனே! உன் மனைவி பாஞ்சாலியைப் பணயமாக வைத்துச் சூதாடினால், இழந்த அத்தனையும் மீண்டும் பெற்றுவிடலாம் என்று சொல்லித் தருமனின் மனத்தை மாற்றினான்.

6. பாஞ்சாலியைப் பணயப் பொருளாக வைத்துத் தோற்றதனைப் பாரதியார் எவ்வாறு கண்டிக்கிறார்?

விடை : பாஞ்சாலியைப் பணயமாக வைத்த செயல்பற்றிப் பாரதியார், நல்ல யாகத்தில் படைக்கப்படுகின்ற வேள்விப் பொருளை, எச்சில் தேடியலையும் நாய்க்கு முன் அது மென்றிட வைப்பது போன்று உள்ளது என்றும், நல்ல உயரமான அகலமுள்ள பொன்மாளிகையைக் கட்டி, அதில் பேயினைத் தேடிக் கண்டுபிடித்துக் குடியமர்த்துவது போல உள்ளது என்றும் கடுமையாகச் சாடுகிறார் பாரதியார்.

7. தேர்ப்பாகனைப் பார்த்துப் பாஞ்சாலி பேசிய மறுப்புரை யாது?

விடை : சபைக்கு அழைத்து வருமாறு துரியோதனனால் அனுப்பப் பட்ட தேர்ப்பாகனைப் பார்த்துப் பாஞ்சாலி,

"யார் சொன்ன வார்த்தையடா?

சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து மாதம் வருதல் மரபோடா? யார் பணியால் என்னை அழைக்கின்றாய்?

என்று தேர்ப்பாகனிடம் தான் வரமுடியாது என்பதைத் தெரிவிக்கின்றாள்.

8. பாஞ்சாலி செய்த சபதம் யாது?

விடை : பாவி துச்சாதனனை என் கணவர் வீமன் கொன்ற பின்னர், அவன் உடம்பிலிருந்து ஊறியெழும் ரத்தத்தையும் பாழ்பட்டுப் போன துரியோதனனின் உடம்பு ரத்தத்தையும் கலந்து என் கூந்தலில் பூசுவேன். அது நடக்கும் வரையில் எந்தன் அவிழ்ந்த கூந்தலை முடிக்கமாட்டேன் என்று சபதம் உரைத்தாள்.

9. தருமனைப் பார்த்து வீமன் கோபங்கொண்டது எதனால்?

விடை : பணயப் பொருளாகச் சூதாட்டத்தில் தன்னையும், தம்பியரையும் பாஞ்சாலியையும் தோற்றதற்குக் கோபங்கொண்டான் வீமன். சூதாடும் இடங்களிலே அடிமை ஏவல் செய்யும் தொண்டு மகளிர்கள் உண்டு. ஆனால் அங்கே கூடச் சூதாட்டத்தில் பணயப் பொருளாக எந்த அடிமைப் பெண்ணையும் வைப்பதில்லை எனக் கூறிக் கோபமடைந்தான்.

10. வீமனின் கோபத்தை அருச்சுனன் தணித்த விதத்தினைக் குறிப்பிடுக.

விடை : தருமன் மீது கடுஞ்சினம் கொண்ட வீமனைப் பார்த்து அருச்சுனன், வீமனே! மூன்று உலகுக்கும் நாயகனான தருமனைச் சினந்து இவ்வாறு சொன்னாய்! தருமத்தின் வாழ்வைச் சூது விழுங்கும். ஆனால் மறுபடியும் தருமமே வெல்லும். இது இயற்கை உண்மை. இன்றைக்கு நாம் பொறுத்திருப்போம். காலம் நிச்சயம் மாறும். அந்த நேரத்தில் தருமம் வெல்வதைக் காணலாம் என்றான்.

11. விதுரன் எத்தகைய பண்பு உள்ளவன்?

விடை : மன்னன் திருதராட்டினனுக்குத் தம்பியாக இருந்தாலும், அமைச்சர் பொறுப்பு ஏற்றவன். நீதிநெறி கற்றவன். நீதியை நிலை நாட்டுவதில் உறவு முறைகளைப் பார்க்காதவன்.

12. பஞ்சாலி சபதத்தில் கூறப்படும் வருணனைகளுள் ஒன்றினைக் குறிப்பிடுக.

விடை : பாண்டவர்கள் அஸ்தினாபுரத்திற்குச் செல்லும் வழியில், மாலை நேர அழகு பற்றி அருச்சுனன் பாஞ்சாலியிடம் சொல்வதாக அமைந்துள்ள பகுதியில், பத்துக்கோடி மின்னலை எடுத்து உருக்கி வார்த்து அதை வட்டமாகச் செய்ததைப் போன்று சூரியன் காணப்படுகின்றான் என்று வருணிப்பதைக் காணலாம்.

ஆசிரியர் பெயர் : கோ. கிருஷ்ணன்

ஆதாரம் : தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழ்நாடு அரசு

---

Filed under: Panchali Sabatham

| பக்க மதிப்பீடு (41 வாக்குகள்) | 3.07317073171 |
|---|---|

மதிப்பீடு:

1
2
3
4
5

*தங்கள் மதிப்பீட்டை பதிவு செய்ய, நட்சத்திரங்களின் மீது நகர்த்தி க்ளிக் செய்யவும்*



---

இந்த இணையதளம், தேசிய அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் “இந்திய முன்னேற்ற நுழைவாயில் (இண். டி. ஜி)” திட்டத்தின் ஒரு அங்கமாகும். இது சமூக மேம்பாட்டிற்கான பயனுள்ள தகவல்களையும், சேவைகளையும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அளித்து வருகிறது. இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் , இத்திட்டத்தை சி.டாக். (உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம், ஐதராபாத்) செயல்படுத்தி வருகிறது.

இறுதியாக திருத்தம் செய்தது: Nov 10, 2020

© 2020 அனைத்து காப்புரிமைகளும் சி-டாக் நிறுவனத்திற்கு உரியது